සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

දෙවන වාර ඇගයීම - 2018
இரண்டாந் தவணை மதிப்பீடு - 2018
Second Term Evaluation - 2018

| ශ්‍රේණිය / தரம் / Grade | 09 | විෂයය / பாடம் / Subject | தமிழ்மொழியும் இலக்கியமும் | පත්‍රය / வினாத்தாள் / Paper | I,II | පැය / மணித்தியாலம் / Hours | 02 |
|---|---|---|---|---|---|---|---|

නම
பெயர்
Name

## பகுதி - I

- **ஒவ்வொரு வினாவிற்குமுரிய மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க**

1. ‘அகன் அமர்ந்து ஈதலின் நன்றே’ - இங்கு ஈதல் என்பது.

   1 மனம் 2. ஏற்றல் 3. கொடுத்தல் 4. வாங்கல்

2. ‘பொங்கிப் பெருகி வழிந்த பெரும் வெளிச்சத்தில் ……….’ இங்கு வெளிச்சம் என்பதன் ஒத்தசொல்

   1. ஒலி 2. ஒளி 3. நிலவு 4. இருள்

3. ‘கனவும் நினைவும் நிலையாகும்’ கனவு என்பதன் எதிர்ச்சொல்

   1. நினைவு 2. நனவு 3. கற்பனை 4. மயககம்

4. ‘நான் துன்பத்தையும் நம்பியதில்லை’ துன்பம் என்பதன் எதிர்ப்பதம்

   1. இன்னல் 2 துயரம் 3 மகிழ்ச்சி 4. இன்பம்

5. பின்வரும் சொற்களுள் பொருளால் வேறுபட்ட சொல்

   1. கானகம் 2. ஆரணியம் 3. அக்கினி 4. அடவி

6. பின்வருவனவற்றுள் ‘நகை’ என்ற சொல் குறிக்காத பொருள்.

   1. ஆபரணம் 2. சிரிப்பு 3. இகழ்ச்சி 4. குளிர்ச்சி

7. வாழைக்குக் கச்சல் போல மாவிற்கு

   1. மூசு 2. வடு 3. பிஞ்சு 4. குரும்பை

8. மாணவ தலைவர்களைத் தெரிவு செய்வதற்கான ‘இன்ரவியூ’ நடைபெற்றது **‘இன்ரவியூ’** என்பதற்கு நிகரான தமிழ்க் கலைச்சொல்

   1. பரீட்சை 2 போட்டிப்பரீட்சை 3 நேர்முகத்தேர்வு 4. எழுத்துத்தேர்வு

9. பின்வருவனவற்றுள் இரட்டைக்கிளவி எது?

   1. தகதக 2 இரவும் பகலும் 3 ஓடிஓடி 4. செக்கச்சிவந்த

10. மாணவர்கள் ……………….. மைதானத்தை வந்தடைந்தார்கள். கீறிட்ட இடத்திற்கு மிகப்பொருத்தமான அடுக்குத்தொடர்.

    1. வண்ண வண்ணமாக 2 பக்கம் பக்கமாக
    3 புதிது புதிதாக 4. வரிசை வரிசையாக

11. கூட்டு வாக்கியத்திலே சமநிலையான தொடர்களை இணைப்பதற்குப் பயன்படும் நிறுத்தக்குறி

1. அரைப்புள்ளி 2 முற்றுப்புள்ளி 3 மேற்கோட்குறி 4. விட்டிசைக்குறி

12. வழமையாக நான் விமலுடன் பாடசாலைக்குச் செல்வேன்.

இன்று நான் கமலுடன் பாடசாலைக்குச் சென்றேன்.

இவ்வாக்கியங்களை இணைப்பதற்குப் பொருத்தமான இணைப்பிடைச்சொல்.

1. ஆகவே 2 அதனால் 3 ஆனால் 4. எனவே

13. ‘பப்பாளி விதை அளவு உடம்பு உடைய பூச்சி’ என்பதில் கையாளப்பட்டுள்ள உவமையணியின் உவமானம் எது?

1. பப்பாளிவிதை 2. அளவு 3. உடம்பு 4. பூச்சி

14. பின்வருவனவற்றுள் கூட்டுப்பெயர் எது?

1. தொழிலாளி 2 மருத்துவம் 3 வானொலி 4 பயிற்சி

15. ‘தாமரையைத் தலையில் சூடினாள்’ என்பதில் தாமரை என்பது எவ்வகை ஆகுபெயர்

1. பொருளாகுபெயர் 2 சினையாகுபெயர்
3 குணவாகுபெயர் 4 காலவாகுபெயர்

16. பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வினைக்கு உதாரணமாக அமைவது.

1. படித்தாள் 2. வரைவாள் 3. சிரித்தாள் 4. உண்டான்

17. பின்வருவனவற்றுள் இடைச்சொல்லுடன் வினைச்சொல் சேர்ந்து ஆக்கப்பட்ட கூட்டுவினை எது?

1. அழுதது 2. பின்பற்றுவோம் 3. சொல்லிக்கொடுத்தான் 4. உத்தரவிடுவேன்

18. “காலை எட்டுமணிக்குக் கட்டாயம் வருவேன்” என அப்துல்லா கூறிச்சென்றான் - இந்த வாக்கியம் எவ்வகை வாக்கியம் ஆகும்.

1. தனிவாக்கியம் 2. கூட்டுவாக்கியம்

3. கலப்பு வாக்கியம் 4. வினாவாக்கியம்

19. எறும்புகள் உணவு சேகரிக்க கூட்டமாகச் செல்கின்றன. இதில் கூட்டமாக என்பது.

1. பெயரடைமொழி 2. வினையடைமொழி

3. செயப்படுபொருள் அடைமொழி 4. எழுவாய் அடைமொழி

20. எறும்புகளின் உடல் மூன்று பகுதிகளைக் கொண்டது. மேற்படி வாக்கியத்தின் எழுவாய்

1. எறும்பு 2. பகுதிகள் 3. கொண்டது 4. உடல்

(2 X 20 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

**முதலாம் இரண்டாம் வினாக்கள் உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. வகுப்பறையில் நீங்கள் கடிதம் ஒன்றை எழுதுவதற்கு மேற்கொண்ட செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
   - அ) நீங்கள் எழுதிய கடிதம் எதனைப் பற்றியது?
   - ஆ) கடிதத்தின் உறுப்புக்கள் எவை?
   - இ) கடிதம் எழுதும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் எவை?
   - ஈ) மேற்படி செயற்பாட்டின் போது நீங்கள் எதிர்நோக்கிய இடர்பாடுகள் எவை?
   - உ) அந்த இடர்பாடுகளை நீக்க செய்யக் கூடியவற்றைக் குறிப்பிடுக.

(2 + 3 + 3 + 3 + 3 = 14 புள்ளிகள்)

2. பின்வரும் தலைப்புக்களில் ஏதேனும் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களில் அமையுமாறு கட்டுரை எழுதுக.
   - அ) உழைப்பே உயர்வு தரும்
   - ஆ) வியப்புத் தந்த சம்பவம்
   - இ) இனியவற்றையே பேசுவோம்
   - ஈ) நிறையுணவு

(16 புள்ளிகள்)

3. பாடநூலை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.
   - அ) செய்யுளை மனனஞ் செய்யும் இலகுவான வழி எது?
   - ஆ) 'எறும்புக் குடும்பம்' என்ற கட்டுரையில் எறும்புப் புற்றுக்களின் அமைப்பு எவ்வாறு வர்ணிக்கப்பட்டுள்ளது?
   - இ) "அழகிய மலர்கள், களைச் செடிகளை விட மோசமான நாற்றம் எடுக்கும்" என்ற வரிகள் இடம்பெற்ற நாடகத்தை எழுதியவர் யார்?
   - ஈ) "வான் குருவியின் கூடு வல்லரக்குத் தொல் கறையான் ….." என்ற ஔவையாரின் பாடல் உணர்த்தும் செய்தி என்ன?
   - உ) "ஒரு சின்னஞ்சிறு பூச்சி" என்ற பாடத்தில் சிறுவனே தோல்வியடைந்தவன் என தந்தை கூறக் காரணம் என்ன?

(5 X 2 = 10 புள்ளிகள்)

4. உமது பாடசாலையில் நடைபெற்ற பொருட்காட்சி தொடர்பாக விபரித்து உமது நண்பனுக்கு 50 – 75 சொற்களில் ஒரு **கடிதம்** எழுதுக.

**அல்லது**

உமது பாடசாலை தமிழ் மன்றம் நடாத்தவுள்ள கலைவிழாவிற்கான **அழைப்பிதழ்** ஒன்றை 50 – 75 சொற்களில் எழுதுக.

(10 புள்ளிகள்)

5. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

அ) மிகமிக ஆழமான கிணறுகள் கூட நீர்வற்றி வரண்டுள்ளன'
மேலுள்ள வாக்கியத்திலுள்ள பெயரடை எது?

ஆ) வினைச்சொல்லுடன் சி, ஐ ஆகிய விகுதிகளை இணைத்து ஒவ்வொரு ஆக்கப்பெயர்கள் எழுதுக.

இ) செயப்படுபொருள் குன்றிய வினைக்கு ஓர் உதாரணம் தருக.

ஈ) 'தங்கை துயில் விட்டு எழுந்தாள்' எனும் தன்வினை வாக்கியத்தைப் பிறவினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

உ) இலங்கையர்களால் சித்திரைப் புத்தாண்டு நிறைவாகக் கொண்டாடப்படுகின்றது.
மேற்படி வாக்கியத்தின் எழுவாய், பயனிலை என்பவற்றை எழுதுக.

(5 X 2 = 10 புள்ளிகள்)

6. பின்வரும் பாடலைப் படித்து அதன் கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

உள்ளத்தில் உண்மை யொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்
தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.

அ) வாக்கினில் உண்மை ஒளி எப்பொழுது உண்டாகும்?

ஆ) கலைகளும் கவிதையும் பெருகுவதனால் கிடைக்கும் நன்மை என்ன?

இ) தமிழமுதின் சுவையை அனுபவித்தவர்கள் எத்தகைய சிறப்பினைப் பெறுவர்?

ஈ) பாடலில் இடம் பெற்றுள்ள அணி யாது?

உ) பின்வரும் சொற்களின் பொருளைத்தருக.

I) விழி

II) அமரர்

(5 X 2 = 10 புள்ளிகள்)

7. பின்வரும் சொற்களை வைத்துப் பொருத்தமான வாக்கியங்கள் அமைக்குக.

அ) கானகம்

ஆ) திண்மை

இ) வைகறை

ஈ) ஏளனம்

உ) உணர்கொம்பு

(5 X 2 = 10 புள்ளிகள்)